بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 31.03.2025 அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஈதுல் ஃபித்ர் பேருரையின் சுருக்கம்**

**இறையச்சம் என்பது தீமைகளிலிருந்து தப்பித்திருப்பது மட்டும் அன்று. மாறாக, உண்மையான இறையச்சம் என்பது நன்மைகளில் நிலைபெற்றிருப்பதும், அவற்றைத் தொடந்து செய்வதுமாகும்**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ரமலான் நேற்று முடிந்தது. இன்று நாம் அல்லாஹ்வின் அருளால் (நோன்புப்) பெருநாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். எந்த நன்மைகளை நாம் ரமலானில் செய்தோமோ, எந்த நன்மைகளை செய்வதற்கு நாம் உறுதிமொழி எடுத்தோமோ, புதுப்பித்தோமோ அவற்றிற்கான மகிழ்ச்சி கொண்டாடப்பட வேண்டும் என்பதற்காகத்தான் நாம் மகிழ்ச்சிக்கான நாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். எனவே இந்தப் பெருநாள் மகிழ்ச்சியைக் கொண்டாடும் நாள் மட்டுமன்று. மாறாக, இப்போது நாம் (ரமலானில் செய்த) அந்த எல்லா நன்மைகளையும் தொடர்ந்து செய்து வருவோம் என்று உறுதிமொழி எடுக்கும் நாளும் ஆகும். இது இருந்தால்தான் நமது பெருநாள் உண்மையான பெருநாளாக இருக்கும்.

**இறையச்சம் என்பது தீமைகளிலிருந்து தப்பித்திருப்பது மட்டும் அன்று. மாறாக, உண்மையான இறையச்சம் என்பது நன்மைகளில் நிலைபெற்றிருப்பதும், அவற்றைத் தொடர்ந்து செய்வதுமாகும்.** நாங்கள் அல்லாஹ்வுக்கான உரிமைகளையும், அடியார்களுக்கான உரிமைகளையும் நிறைவேற்றுவதில் எப்பொழுதும் உறுதியாக நிலைபெற்றிருப்போம் என்ற அந்த உறுதிமொழியை இன்று நாம் புதுப்பிக்கின்றோம்.

பெருநாள் என்பது வெறும் உண்பது, பருகுவது, விளையாடுவது, துள்ளிக் குதிப்பது அல்லது புத்தாடை அணிவது ஆகியவற்றிற்கான பெயர் அன்று. மாறாக, நாம் இனிமேல் நல்ல விஷயங்களைத் தொடர்ந்து செய்து வர வேண்டும்; தீமைகளிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும் என்பதை சிந்திப்பதற்கான தூதுச் செய்தியைப் பெருநாள் நமக்கு வழங்குகிறது. இன்று பெருநாளைக் கொண்டாடி விட்டு, ராமலானுக்கு முன்னர் நம்மில் சிலருக்கு இருந்த நமது அதே நிலைமையின் பக்கம் நாம் திரும்பிச் சென்று விட்டோம் என்றால் அல்லது நமது காலடிகளை முன்னேற்றத்தின் பக்கம் முன்னெடுத்து வைக்கவில்லை என்றால், அது நம்பிக்கை கொண்டவரின் மாண்புக்கு எதிரானதாக இருக்கும். நம்பிக்கை கொண்டவரின் மாண்பு என்பது அவர் நன்மைகளில் தொடர்ந்து முன்னேறிக் கொண்டே இருக்கிறார் என்பதேயாகும்.

இன்றைய நாள், அந்த உறுதிமொழியைக் கடைப்பிடிப்பதற்கு நாமே ஆயத்தமாக இருக்கின்றோமா, நாம் அல்லாஹ்விடம் செய்த உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கான முயற்சியில் உண்மையிலேயே ஈடுபடுபவர்களாக இருக்கின்றோமா என்று நம்மை நாம் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அடிப்படைக் கொள்கையின்படியோ, ஒரு மாத நோன்புகளால் நமக்கு இறைவன் கிடைத்து விட்டான் என்ற காட்சியை நமக்குக் காட்டுவதாக **பெருநாள்** இருக்க வேண்டும். இறைவன் கிடைத்து விட்டான் என்றால், பிறகோ நன்மைகளில் முன்னேற்றம் தென்பட வேண்டும்.

பெருநாள் மகிழ்ச்சியைக் கொண்டாடும் நாள் மட்டுமன்று. மாறாக, இது இறைவணக்கங்களின் பக்கம் சிறப்பான கவனம் செலுத்த வேண்டிய நாள் ஆகும். இந்த நாளில் நமக்கு மற்ற நாள்களை விட அதிகத் தொழுகைகள் கடமையாக்கப்பட்டுள்ளன. மற்ற நாள்களிலோ நமக்கு ஐந்து தொழுகைகள் கடமையாகும். ஆனால் பெருநாளில் நமக்கு ஆறு தொழுகைகள் கடமையாகி விடுகின்றன. எனவே இது இறைவணக்கங்களுக்கான ஒரு தனிச்சிறப்பான நாளாகும். இந்த விஷயத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நமக்கு இறைவன் கிடைக்கவில்லை என்றால், நாம் அவனுக்குரிய வணக்கத்திற்கான உரிமைகளை நிறைவேற்ற இயலாமல் போய்விட்டது என்றால், இறையடியார்களின் உரிமைகளை நிறைவேற்ற இயலாமல் போய்விட்டது என்றால், நாம் இறைவனைப் பெறுவதற்கான உரிமைகளை நிறைவேற்றவில்லை என்றால், பிறகு வெறும் மகிழ்ச்சிகளைக் கொண்டவது மட்டும் பெருநாளின் நோக்கம் அல்லவே! இறையடியார்களுக்கான உரிமைகளையும் நிறைவேற்றுவது அவசியமாகும். அதுவும் ஒருவகையான இறைவணக்கம் ஆகும்.

எவருக்கு இறைவன் கிடைக்கவில்லையோ அப்படிப்பட்ட நபருக்கான எடுத்துக்காட்டாக, அவரை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் வைரம், இரத்தினங்களை அடையாளமே காணத் தெரியாத அப்படிப்பட்ட மனநலம் பாதிக்கப்பட்டவருடன் ஒப்பிட்டுக் கூறியிருகின்றார்கள். அவர் கண்ணாடித் துண்டை வைரமாகக் கருதுகிறார். மனிதனுக்கு இறைவனுடன் சிறப்பான தொடர்பு ஏற்படும்போதுதான் அவர் இறைவனை அடையாளம் கண்டு கொள்ள முடியும். அல்லாஹ், தான் விரும்புபவருக்குத் தன்னைப் பற்றிய அடையாளத்தையும், ஞானத்தையும் வழங்குகிறான். இறைவனை அடைந்து விட வேண்டும் என்பதுதானே ஓர் உண்மையான நம்பிக்கை கொண்டவரின் மகிழ்ச்சியாக இருக்கிறது!

‘ஒரு தாய்க்கு காணாமல் போன தன் குழந்தை கிடைத்து விடுவதால் எந்த அளவுக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறதோ அதை விட அதிகமான மகிழ்ச்சி இறைவனுக்கு தன் அடியான் தன் பக்கம் திரும்பி வருவதால் ஏற்படுகிறது’ என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

“சந்தேகமின்றி பெருநாள் ஓர் அருளுக்குரிய நாள் ஆகும். ஆனால் அதை விடப் பெரிய அருளுக்குரிய நாள் ஒன்று இருக்கிறது. அது, மனிதனின் தவ்பாவுக்கான (பாவமன்னிப்புக்கான) நாள் ஆகும். அந்த நாள் வெள்ளிக்கிழமை, பெருநாள் ஆகியவற்றை விடவும் அதிக மகிழ்ச்சிக்குரிய நாளாகும்.”

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் (தொடர்ந்து) இவ்வாறு கூறுகிறார்கள்:

“உண்மையான தவ்பா என்பதுடன் உண்மையான பரிசுத்தம், தூய்மை ஆகியவை நிபந்தனை ஆகும். மேலும் எல்லாவிதமான அசுத்தம், மாசு ஆகியவற்றிலிருந்து விலகியிருப்பது நிபந்தனையாகும். இல்லையென்றால், வெறும் தவ்பா செய்கிறோம் என்றும், (தவ்பா, தவ்பா என்று) அந்தச் சொல்லை மீண்டும் மீண்டும் கூறுவதால் மட்டும் எந்தப் பயனுமில்லை. எந்த நாளில் ஒரு மனிதர் தனது கெட்ட செயல்களிலிருந்து தவ்பா செய்து அல்லாஹ்வுடன் உண்மையாக **சமரசம் செய்து கொள்வதற்கான** உறுதிமொழி எடுத்துக் கொள்கின்றாரோ, அவனுடைய கட்டளைகளுக்கு முன்னால் சிரம் பணிந்து விடுகின்றாரோ அத்தகைய அருளுக்குரிய நாளாக (அது) இருக்குமோ, (அந்த நாளில்) அவர், மறைமுகமாக அவரது தீய செயல்களின் தண்டனைக்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்த அந்தத் தண்டனையிலிருந்து காப்பாற்றப்படுவார்; மேலும் இவ்வாறு அந்த மனிதர் தனக்கு நம்பிக்கையே இல்லாருந்த அத்தகைய ஒன்றைப் பெற்று விடுவார் என்பதில் என்ன சந்தேகம் இருக்கிறது?

இன்றைய காலத்தில் உலகில் இவ்வளவு அசுத்தங்கள் இருக்கின்றன; ஆனால் இந்த நாள்களில் ஒரு நம்பிக்கையாளர் அல்லாஹ்வுக்காக நோன்பு வைக்கிறார்; அவனது நெருக்கத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்கிறார். அப்போது அல்லாஹ் அவருக்கு அதற்கான நற்கூலியை மிக அதிகமாக வழங்குகிறான். நாம் இந்த விஷயங்களின் படி செயல்படுவதற்கு முயற்சி செய்வோம் என்றால், நாமும், நம் குடும்பமும் பெருநாளின் உண்மையான குறிக்கோளாக இருக்கும் அந்த உண்மையான பெருநாளின் மகிழ்ச்சிகளைப் பெறக் கூடியவர்களாக இருப்போம்.

நாம் ரமலானில் மேற்கொள்வதற்கு முயற்சி செய்திருந்த அந்த நன்மைகளைத் தொடர்ந்து செய்பவர்களாக அல்லாஹ் இப்போது நம்மை ஆக்குவானாக. ரமலானில் தராவீஹ் அல்லது தஹஜ்ஜுத் தொழுகைக்காக பள்ளிவாயில்களுக்கு வந்து கொண்டிருந்தோம் என்றால், இப்போது வீடுகளில் கொஞ்சமாவது நஃபில் (எனும் விருப்பத் தொழுகை)களைக் கடைபிடிப்பவர்களாக ஆவோமாக. நாம் இறையடியார்களுக்கான உரிமைகளை நிறைவேற்றக் கூடியவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக. ஒருவர் மற்றவரின் உரிமைகளை நிறைவேற்றக் கூடியவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக. இந்தத் தூய்மையான மாற்றத்தை நம்மிடம் உருவாக்கிக் கொண்டே செல்வானாக.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் துஆவுக்காக எடுத்துக் கூறியவாறு, இவ்வாறு கூறினார்கள்:*

அல்லாஹ் எல்லா அஹ்மதிகளையும் தனது கருணையின் போர்வையில் போர்த்திக் கொள்வானாக என்று துஆ செய்து கொண்டிருங்கள். அதிகமான இடங்களில் வற்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட பல அஹ்மதிகள் காரணமின்றி பெயரளவிலான சட்டத்தின் பிடியில் இருக்கின்றனர். எடுத்துக்காட்டாக, பாகிஸ்தானில் மார்க்க சுதந்திரத்துடன் பெருநாள் தொழுகை கூட தொழ முடிவதில்லை. அவர்கள் உண்மையான பெருநாளைக் கொண்டாடக் கூடியவர்களாகவும், தம்மை இறைவனுக்கு அருகில் கொண்டு வரக் கூடியவர்களாகவும், பெருநாளின் வெளிப்படையான மகிழ்ச்சிகளையும் கொண்டாடக் கூடியவர்களாகவும் ஆவதற்கான நல்வாய்ப்பை

அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக. அல்லாஹ் அவர்களின் கடினங்களை விரைவில் அகற்றுவானாக. இன்றும் அவர்கள் பெரிய அச்சமான நிலையில் பெருநாள் தொழுகையை நிறைவேற்றிருக்கின்றனர். நேரங்களை மாற்றி மாற்றி, இடங்களை மாற்றி மாற்றி தொழுகையை நிறைவேற்றிருக்கின்றனர். கராச்சியிலும் இன்னும் சில இடங்களிலும் தொழுகைகளைத் தொழுவதிலிருந்து தடை செய்யப்பட்டும் இருக்கிறது. மேலும் (நம்முடைய) பள்ளிவாயில்களில் எதிரிகள் தாக்குதல்களையும் நடத்தினர். சட்டத்தை நிறைவேற்றுபவர்களின் நிலை என்னவென்றால், தாக்குபவர்களைத் தட்டுப்பதற்குப் பகரமாக அவர்கள் நம்முடைய பள்ளிவாயில்களுக்குப் பூட்டு போட்டு விட்டனர். அல்லாஹ் விரைவில் இந்த எதிரிகளைப் பிடிப்பதற்கான வழிவகையை உருவாக்குவானாக. ஆமீன்.

நோயாளிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அனைத்து நோயாளிகளுக்கும் உடல்நலத்தை வழங்குவானாக. மானிடம், இஸ்லாம் மற்றும் ஜமாஅத்திற்காக பொருள் மற்றும் எல்லா விதத்திலும் தியாகம் செய்பவர்களின் மீது அல்லாஹ் தனது அருள்களை இறக்குவானாக. ஷஹீதானவர்களின் பிள்ளைகளுக்காகவும், இறைவழியில் சிறைப்பிடிப்பில் இருப்பவர்களுக்காகவும், வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களுக்காகவும், பொதுவாக முஸ்லிம் உம்மத்திற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் முஸ்லிம்களுக்கு அறிவையும், புரியும் திறனையும் வழங்குவானாக. இந்த மக்கள் உண்மையான முறையில் இறைவனின் ஆடையைப் பற்றிப் பிடிக்கட்டுமாக. இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டு இந்த மக்கள் இறைவனின் திருப்தியைப் பெற இயலட்டுமாக. மேலும் உண்மையான பெருநாளைக் கொண்டாட இயலட்டுமாக. ஆமீன்.

*இரண்டாவது குத்பாவின் இறுதியில், ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் உலகெங்கிலுமுள்ள அஹ்மதிய்யா ஜமாஅத் அன்பர்களுக்கு ஈது முபாரக் எனும் அன்பளிப்பை வழங்கினார்கள். அதற்குப் பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:*

பாகிஸ்தானிலுள்ள மக்களை உங்களின் நிரந்தரமான துஆக்களில் நினைவில் கொள்ளுங்கள்; கணிசமான அளவுக்கு கடுமையான நிலை இருக்கிறது. அல்லாஹ் உண்மையான பொருளில் அவர்களின் பெருநாளை அருளுக்குரியதாக ஆக்குவானாக. அவர்கள் அனைவருக்கும் பெருநாள் அருளுக்குரியதாக ஆகட்டுமாக. அந்த இயலாதவர்கள் வீட்டில் அமர்ந்திருக்கின்றனர். வெளிப்படையில் நம்பிக்கை இழந்திருக்கின்றனர். ஆனால் அவர்கள் கவலைப்படக் கூடாது. அல்லாஹ் விரைவில் நிலைமைகளை மாற்றி விடுவான் - இன்ஷா அல்லாஹ். (ஆமீன்).

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ
يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ
اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا
اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மது H.A)